**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க.எண்.1985/மாஒ1/நா.மு–42/ஒபக/2023, நாள். 11 .12.2023**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – நான் முதல்வன் – உயர்கல்வி வழிகாட்டி திட்டம் – அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் JEE நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்த 12 – ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் வழங்குதல் – சார்பு.

பார்வை : சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2349/ஆ2/நா.மு.42/ஒபக/2023, நாள். 07.12.2023.

*********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம், பார்வையில் காணும் சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் செயல்முறைகளின் படி, அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12–ம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக நடப்பு ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12–ம் வகுப்பு பயிலும் மாணவர்களில் JEE நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளவர்களில் விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களுக்கு பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அட்டவணையின்படி வருகின்ற டிசம்பர் 26 முதல் ஜனவரி 20–ம் தேதி வ்ரை பயிற்சி வகுப்புகள் அனைத்து பள்ளிகளிலும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே JEE நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புகள் குறித்த தகவல்களை தெரிவித்து பயிற்சியில் கலந்துக் கொள்ள வலுயுறுத்த அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் உரிய நடவடிக்கைகளை மேறகொள்ளும் பொருட்டு பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும் பயிற்சி காலஅட்டவணை விவரங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு –
பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும்
பயிற்சி காலஅட்டவணை.

பெறுநர் –
1. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு).
2. அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் – 1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்.